IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP No.328/2015 Date: 12.10.2023.

PW1-முருகேசன்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

என் மீது மோதிய இருசக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால்சரிதான். அதனால் அந்த வாகனத்தின் உரிமையாளர் மட்டும் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து நான் சாலையை கடக்கும் போது நடந்தது என்றால் சரிதான். நான் தான் சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் கடந்தேன் என்றாலும் என்னுடைய கவனகுறைவால் தான் விபத்து ஏறப்ட்டது என்றாலும் சரியல்ல. என்னுடைய கவனகுறைவை மறைப்பதற்காக தான் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நெசவு தொழில் செய்கிறேன். அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு மாதம் ரூ.15000 வருமானம் கிடைப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கொடுத்துள்ள மருத்துவ பில்கள் மிகைபடுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. விபத்து என் கவனகுறைவால் ஏற்பட்டதால் 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

Sd/-முருகேசன்

Sd/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.